# துறை சார்ந்த விபரம்

**01.03.2018**

## தேனி மாவட்ட ஆட்சியரகம், தேனி.

# கூட்டுறவுத் துறை

கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் அலுவலகம், தேனி மண்டலம்
மாவட்ட பெருந்திட்ட வளாகம்–I, தேனி மாவட்ட ஆட்சியரகம்,
தேனி–625 531, தொலைபேசி:04546–255688
மின்னஞ்சல்: jrthn.rcs1997@gmail.com

# துறை அமைப்பு

| | |
|---|---|
| மண்டலம் | கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் அலுவலகம், தேனி மண்டலம் மாவட்ட பெருந்திட்ட வாளகம்-I, தேனி மாவட்ட ஆட்சியரகம்,தேனி-625 531,<br>தொலைபேசி:04546-255688<br>மின்னஞ்சல்: jrthn.rcs1997@gmail.com |
| சரகம் | 1. கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர்,<br>பெரியகுளம் சரகம்.<br>15, ஜே.ஆர்.ஆர். நகர், வைகை அணை சாலை,<br>பெரியகுளம்–625 601, தொலைபேசி: 04546 – 231262,<br>மின்னஞ்சல்: drpkm.tnrcs@gmail.com |
| | 2. கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர்,<br>உத்தமபாளையம் சரகம்.<br>நிலவள வங்கி மேல்மாடி, பாரத ஸ்டேட் வங்கி எதிரில்,<br>தெற்கு ரத வீதி, உத்தமபாளையம்– 625 533.<br>தொலைபேசி: 04554 – 265872<br>மின்னஞ்சல்: drupm.rcs@gmail.com |
| பொது விநியோகத் திட்டம் | கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர்(பொ.வி.தி.),<br>தேனி மாவட்டம்.<br>மாவட்ட பெருந்திட்ட வாளகம்–I,<br>தேனி மாவட்ட ஆட்சியரகம்,தேனி–625 531,<br>தொலைபேசி:04546–255688<br>மின்னஞ்சல்: drpds.tn@gmail.com |

# தேனி மாவட்டம்
# கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளார் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் சங்கங்கள்

| வ.எண் | சங்கங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் | 80 |
| 2. | தொடக்க வேளாண்மை கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் | 04 |
| 3. | கூட்டுறவு நகர வங்கிகள் | 02 |
| 4. | நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் | 02 |
| 5. | பணியாளர்கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கங்கள் | 16 |
| 6. | தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் | 09 |
| 7. | தொடக்க வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 02 |
| 8. | கம்பம் மகளிர்கூட்டுறவுக் கடன் சங்கம் | 01 |
| 9. | மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் | 01 |
| 10. | மாணவர் கூட்டுறவு பண்டகசாலை | 01 |
| | மொத்தம் | 118 |

# கூட்டுறவுத் துறை – தேனி மாவட்டம்
# தேனி மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் சேவைகள்

**01.03.2018**

| | | | |
|---|---|---|---|
| 1. | வட்டியில்லா பயிர்கடன் மற்றும் நகைக்கடன் பேரில் பயிர்கடன் | : | விவசாயிகளுக்கு அதிகபட்சமாக ரூபாய் 3 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. தவணைக் காலத்ததிற்குள் திருப்பிச் செலுத்தினால் வட்டியில்லா கடனாக வழங்கப்படுகிறது. இதில் நபர் ஜாமின் பேரில் ரூபாய் ஒரு இலட்சம் வரை கடனாகவும் மற்றும் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேல் சொத்து அடமானத்தின் பேரில் கடனாகவும் வழங்கப்படும். |
| 2. | பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டம் | : | பிரதம அமைச்சரின் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பகுதி வாரியான அடிப்படையில் வட்டாரத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட கிராமங்களில் ராபி 2017 பருவத்தில் நெல் –II (சம்பா), கம்பு, சோளம், மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு காப்பீடு வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டம் நியு இந்தியா அசுயூரன்ஸ் நிறுவனத்தின் பங்கேற்புடன் வேளாண்மை துறையுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகள் தாமாக முன்வந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் காப்பீட்டு கட்டணத்தை உரிய விண்ணப்பம் மற்றும் ஆவணங்களுடன் செலுத்தி பயனடையலாம். |
| 3. | நகைக்கடன் | : | கூட்டுறவு சங்கங்களில் 10.5 விழுக்காடு வட்டி விகிதத்தில் தனி நபருக்கு ரூ.8 இலட்சம் வரை நகைக்கடன் வழங்கப்படுகிறது. |
| 4. | மத்திய கால கடன்கள் | : | கூட்டுறவு சங்கங்களில் சிறுபாசன கடன், கறவைமாட்டுக்கடன், சொட்டுநீர் பாசன கடன், கூட்டுப் பொறுப்புக் குழுக்கடன் ஆகிய கடன்கள் வழங்கப்படுகிறன. விவசாய உபகரணங்கள் வாங்கிட ரூபாய் 10,000 மானியம் வழங்கப்படுகிறது. |
| 5. | சுய உதவி குழுக்கடன்கள் | : | சுய உதவி குழுக்களுக்கு பொருளாதார வளர்ச்சிக்கடன், நேரடிக்கடன் மற்றும் சுழல்நிதிக்கடன் வழங்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | | மேலும் பயிர்க்கடனும் வழங்கிறது. |
| 6. | மாற்றுத் திறனாளிகளுக்கான கடன் | : | மாற்றுத் திறனாளிகளுக்கு சிறுதொழில் கடன் அவர்களது தொழிலுக்கேற்ப வட்டியில்லாமல் அதிகபட்சம் ரூபாய் 10 இலட்சம் வரை மத்திய கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்படுகிறது. உரிய கால தவணைக்குள் கடனை செலுத்தும் நேர்வில் வட்டியை அரசே செலுத்துகிறது. |
| 7. | பணியாளருக்கு கடன்கள் | : | பணியாளர் கூட்டுறவு சிக்கன நாணயச் சங்கங்கள் மூலம் உறுப்பினர்களுக்கு அதிகபட்சம் ரூபாய் 14 இலட்சம் வரை (உறுப்பினர் பெறும் ஊதியத்தை பொறுத்து) வழங்கப்படுகிறது. மேலும் சிச்கன சேமிப்பு வசதியும் உள்ளது. |
| 8. | வேளாண் மருந்தகம் | : | கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் வேளாண் மருந்தகங்களில் (AGRI CLINIC) மண் மாதிரி ,ஆய்வு நீர் பரிசோதனை, வேளாண்மை தொழில்நுட்ப ஆலோசனை முதலியன வழங்கப்படுகின்றன. |
| 9. | வேளாண்மை சேவை மையங்கள் | : | மாவட்டத்தில் இந்த மையங்கள் மூலம் டிராக்டர் உள்ளிட்ட உபகரணங்கள் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்கப்படுகின்றன. |
| 10. | உரம், விதை விற்பனை | : | கூட்டுறவு சங்கங்கள் மூலம் அனைத்து வகையான உரங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் தரமான விதைகள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. |
| 11. | தானிய ஈட்டுக்கடன் | : | கூட்டுறவு சங்கங்களில் நெல், மக்காச்சோளம் முதலான தானியங்களின் அடமானத்தின் பேரில் தனி நபருக்கு ரூபாய் 3 இலட்சம் வரை தானிய ஈட்டுக்கடன் வழங்கப்படுகிறது. |
| 12. | டாம்கோ, டாப்செட்கோ கடன்கள் | : | தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (TABCEDCO) மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (TAMCO) நிதியுதவிடன் கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 6 விழுக்காடு வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. |
| 13. | பொது சேவை மையம் | : | கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் பொது சேவை மையங்கள் வழியே வருவாய்துறை மூலம் வழங்கும் சான்றிதழ்கள், பட்டா, நிலஉரிமை ஆவணங்கள் மற்றும் இரயில், விமான முன்பதிவு, காப்பீடு பிரிமீயம் செலுத்துதல், மின்கட்டணம் |

| | | | |
|---|---|---|---|
| | | | செலுத்துதல், செல்போன் ரீ சார்ஜ், வேலைவாய்ப்பு இணையம் வழியே விண்ணபம் பதிவு மற்றும் பதிவு புதிப்பித்தல், அரசுவேலைகளுக்கு இணையவழி விண்ணப்பித்தல் முதலிய சேவைகள் வழங்கப்படுகின்றன. |
| 14. | கூட்டுறவு மருந்தக்கடை | : | கூட்டுறவு சங்கங்கள் மூலம் தேனி, பெரியகுளம், சின்னமனூர், கம்பம், ஆண்டிபட்டி, போடிநாயக்கனூர் மற்றும் உத்தமபாளையம் ஆகிய இடங்களில் பொதுமக்களுக்கு அதிகபட்ச சில்லைரை (MRP) விலையில் 15 விழுக்காடு வரை தள்ளுபடி விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்படுகிறன. |
| 15. | பொது விநியோக திட்டம் | : | பொது விநியோக திட்டம் மூலம் விலையில்லா அரிசி, மான்ய விலையில் பருப்பு வகைகள், பாமாயில், கோதுமை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவைகள் தேனி மாவட்டத்தில் 401 முழுநேர நியாய விலைக் கடைகள், 91 பகுதிநேர கடைகள் மற்றும் 8 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் மூலம் 3,92,718 குடும்ப அட்டைதார்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. |
| 16. | நாபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (RIDF) கிட்டங்கிகள் | : | தேனி மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (RIDF) திட்டத்தின்கீழ் கொதுவைக்கடன் வழங்க 100 மெட்ரிக்டன் , 500 மெட்ரிக்டன் மற்றும் 1000 மெட்ரிக்டன் அளவுள்ள 90 கிட்டங்கிகள் உள்ளன. இதன் மூலம் விவசாயிகளுக்கு கொதுவைக்கடன் கூடுதலாக வழங்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. |

***– திட்ட நிபந்தனைகள் வட்டிவீதங்கள் காலம்தோறும் மாறுதலுக்கு உட்பட்டது.***

*கண்காணிப்பு அலுவலர்*

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.ட்டி. இராமகிருஷ்ணன் |
| பதவி | : | கூட்டுறவு சார்பதிவாளர்/ கண்காணிப்பாளர் ""ஆ"" |
| தொடர்புக்கு | : | தொலைபேசி:04546–255688<br>மின்னஞ்சல்: jrthn.rcs1997@gmail.com |
| முகவரி | : | கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர்<br>அலுவலகம்,<br>தேனி மண்டலம்,<br>மாவட்ட பெருந்திட்ட வாளகம்–I,<br>தேனி மாவட்ட ஆட்சியரகம்,தேனி–625 531,<br>தொலைபேசி:04546–255688<br>மின்னஞ்சல்: jrthn.rcs1997@gmail.com |